## தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டின் இறுதி வரை அரசாங்கத்திலிருந்தும் செஸ் நிதியத்திலிருந்தும் பெறப்பட்ட முறையே ரூபா 75,192,353 மற்றும் ரூபா 64,825,402 தொகைகள் என்பன மூலதன மானியக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 40 இன் பிரகாரம் வருமானம் உழைக்கும் சொத்துக்களைப் போன்றே ஏனைய சொத்துக்களினதும் பொதுவான பெறுமதி வருடாந்த இறுதிக் கணக்குகளில் காட்டப்பட வேண்டிய போதிலும் அதிகார சபைக்குச் சொந்தமான கோட்டை ஆதிபாத வீதியில் அமைந்துள்ள கட்டிடத்தின் பெறுமதி புத்தகங்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கொடுக்கல் வாங்கல்களின் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 17,666,574 தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகள் அதிகார சபையின் தலைவரினது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதன் பிரகாரம் கணக்குகளில் அக் குறைபாடுகள் தொடர்பாக சீராக்கங்களைச் செய்து திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீள சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதன் சீராக்கங்களுக்குப் பின்னரும் கணக்கீட்டுக் குறைபாடுகளை அகற்றுவதற்கு முடியாதிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகார சபைக்கு 2006 ஆம் ஆண்டு முதல் தனியார் விவசாயக் கம்பனியொன்றிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,450,000 தொகையானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவர் கவனயீனமாகப் பயன்படுத்திய நிதிக்காக அறவிட வேண்டியிருந்த நிதி மற்றும் அதற்குரிய வட்டிப் பணம் என்பவற்றின் கூட்டுத்தொகை ரூபா 1,580,992 இனை அறவீடு செய்யாமல் கணக்குகளில் தொடர்ந்து ஆலை உரிமையாளர்களின் நிதியக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக உயர்நீதிமன்ற வழக்கு விசாரணை ஒன்று நடைபெறுவதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) அரசிற்குச் சொந்தமான கம்பனியொன்றிலிருந்து 1985 ஆம் ஆண்டிலிருந்து கிடைக்க வேண்டிய கடன் பணமான ரூபா 26,715,037 தொகைக்காக 2007 திசெம்பர் 31 வரை அறவிட வேண்டியிருந்த வட்டிப் பணமான ரூபா 86,147,529 தொகையானது 2008 ஆம் ஆண்டில் பெறப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டில் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. 2008 தொடக்கம் 2011 வரையான வருடங்களுக்காக அறவிட வேண்டியிருந்த ஆனால் அறவிடப்படாத ரூபா 16 மில்லியனான வட்டிப் பணத்தை அறவிட முடியாமல் தேங்காய் எண்ணெய் விலையினை நிலை நிறுத்துதல் நிதியத்தின் கணக்குகளில் செம்மையாக்கப்பட்டிருந்தது. அதற்கு

மேலாக வட்டி தவிர்ந்த கடனாக ரூபா 31.55 மில்லியன் தொகையும் அக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இக் கடன் பணத்தை அதிகாரசபையினால் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிட முடியாதிருந்தது.

(ஈ) கடன்பட்டோர் மீதியில் ஒருவருடத்திற்கு மேற்பட்ட பழைய கடன்பட்டோர் மீதி ரூபா 1,680,652 ஆக இருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | உத்தியோக பூர்வ வாகனங்கள் ஒதுக்கின்ற போது சுற்றுநிரூபத்திற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் ஒருவருக்கு சாரதி மற்றும் எரிபொருள் தவிர்ந்த வாகனமொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது இவ் வாகனத்தின் பழுது பார்த்தல் செயற்பாடுகளுக்காக அதிகார சபையினால் ரூபா 264,886 செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 104 | வாகன இழப்புக்கள் சம்பந்தமான தகவல்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் செயற்பாடுகளின் செயலாற்றல் விளைவு ரூபா 13.8 மில்லியன் பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 19.01 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 32.81 மில்லியன் தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது. இதற்காக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது அரசாங்க மானியம் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 58 மில்லியனால் குறைவடைந்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகார சபையின் மொத்த நானாவித கடன்பட்டோரான ரூபா 35 மில்லியனில் ரூபா 16 மில்லியனுக்காக அதாவது 46% அறவிட முடியாக் கடனுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் மொத்த வருமானங்களில் 65% திறைசேரி மானியங்களையும் 19% வட்டி வருமானங்களையும் 15% செயற்பாட்டு வருமானங்களையும் 1% நானாவித வருமானங்களையும் உள்ளடக்கியிருந்தன.

(இ) தேங்காய் எண்ணெயின் விலையினை நிலைநிறுத்துதல் நிதியத்திலிருந்து அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனி ஒன்றுக்கு வழங்கப்பட்ட கடன் பணத்திற்குரிய ரூபா 4 மில்லியன் தொகையான வட்டி ஆண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டு ஆண்டின் போது ஐயக் கடனாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய முக்கியமான கணக்கீட்டு விகிதாசாரங்களில் சில கீழே தரப்படுகின்றது.

| | **மீளாய்வாண்டு** | **முன்னைய ஆண்டு** |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 53:1 | 38:1 |
| திரவச் சொத்து விகிதம் | 52:1 | 37:1 |

நிறுவனமொன்றின் பொதுவான நடைமுறை விகிதம் மற்றும் திரவச் சொத்து விகிதம் என்பன 2:1 மற்றும் 1:1 என்ற வீச்சில் காணப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையின் நடைமுறை விகிதம் மற்றும் திரவச் சொத்து விகிதம் என்பன அசாதாரணமாக இருந்தமையால் அதிகார சபையின் நிதியத்தின் முகாமைத்துவத்தில் திறன்வாய்ந்த செயற்பாடுகள் எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

செயன்முறை அபிவிருத்தி, தரக்கட்டுப்பாடும் தரப்பாதுகாப்பும், சந்தைப்படுத்தல் அபிவிருத்தியும் ஆராய்ச்சியும், நிதி மற்றும் நிர்வாகம் எனும் ஐந்து பிரிவுகளை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்பாடு உள்ளடக்கியுள்ளது.

அதிகாரசபை மேற்குறித்த பிரிவிற்கு மேலதிகமாக துண்டுத் தேங்காய் உற்பத்தியினை அபிவிருத்தி செய்வதற்காக ஆலை உரிமையாளர்கள் நிதியம் மற்றும் தேங்காய் எண்ணெய் விலையினை நிலை நிறுத்துதல் நிதியம் என்பன பேணப்பட்டுவருகின்றன. மீளாய்வாண்டின் போது ஒவ்வொரு பிரிவினதும் பிரதான செயற்பாடுகளின் இலக்குகளும் அவற்றினை அடைந்து கொள்ளலும் சுருக்கி கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

### 3.1 செயலாற்றல்

### 3.1.1 நிதிச் செயலாற்றல்

(அ) அதிகாரசபையின் நானாவித பிரிவின் கீழ் 2011 ஆம் ஆண்டில் 15 செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 192.4 மில்லியனுக்குரிய எவ்வித செயலாற்றலையும் காணமுடியவில்லை.

(ஆ) தரக் கட்டுபாடு மற்றும் தரப் பாதுகாப்பு பிரிவு, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் செயன்முறை அபிவிருத்திப் பிரிவு என்பனவற்றின் கீழ் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 8 செயற்திட்டங்களுக்குரிய செயலாற்றல் 1% - 26% வரை ஆகக் குறைந்த நிலையில் காணப்பட்டது.

### 3.1.2 மீண்டெழும் செலவினம் அதிகரித்தலும் அபிவிருத்திச் செலவினம் குறைவடைதலும்

அதிகார சபையின் முன்னைய சில வருடங்களின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களை இணக்கஞ் செய்த போது மொத்த செலவினங்களுக்கு ஒப்பாக மீண்டெழும் செலவினங்களில் அதிகரிப்பும், மூலதன செலவினத்தில் குறைவடையும் நிலைமையும் அவதானிக்கப்பட்டது.

| | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| மொத்த மூலதனச் செலவினம் | 66,009,936 | 72,444,819 | 121,555,671 |
| முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகின்றபோது மொத்த மூலதனச் செலவினம் குறைவடைதல் | 9% | 40% | - |
| மொத்த மீண்டெழும் செலவினம் | 122,090,058 | 118,527,536 | 120,965,589 |
| முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகின்ற போது மொத்த மீண்டெழும் செலவினத்தில் அதிகரிப்பு / (குறைவு) | 3% | (2%) | - |

### 3.2 நட்டத்துடன் செயற்பட்ட செயற்திட்டங்கள்

அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற பின்வரும் செயற்திட்டங்கள் கடந்த சில வருடங்களில் தொடர்ச்சியாக நட்டத்தை அடைந்திருந்தன.

| | நட்டம் | |
|---|---|---|
| **செயற்திட்டம்** | **2011** | **2010** |
| துன்கண்ணாவ | 1,365,368 | 2,670,717 |
| வஹரக்கொட | 203,189 | 268,869 |
| தம்பதெனிய | 20,500 | 94,130 |
| நெல்லிய | 5,252 | 122,966 |
| மொத்த நட்டம் | 1,594.309 | 3,156,682 |

### 3.3 தாமதமான செயற்திட்டங்கள்

நாரஹன்பிட்ட அலுவலகத்தில் கழிவுகள் வழிந்தோடும் வடிகாணைத் திருத்தம் செய்வதற்காக 2010 ஆம் ஆண்டின் போது மூலதன நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 7 மில்லியன் தொகையொன்று அங்கீகரிக்கப்பட்டு உரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக கொழும்பு மாநகர சபைக்கு அதில் ரூபா 2 மில்லியன் முற்பணத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இச் செயற்திட்டம் தொடர்பாக எவ்வித பௌதீக செயலாற்றல்களும் காணப்படவில்லை.

### 3.4 தேங்காய் எண்ணெயின் விலையினை நிலைநிறுத்துதல் நிதியம்

இந் நிதியம் தேங்காய் எண்ணெய் விலைத் தளம்பலினால் தொழிலுக்கு ஏற்படும் பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்காக இற்றைக்கு 21 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட நிதியமாகும். தேங்காய் எண்ணெய் விலை வீழ்ச்சியடையும் காலங்களில் இந் நிதியத்தின் மூலம் தேங்காய் எண்ணெய் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டு தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கும் சந்தர்ப்பங்களின் போது சந்தைக்கு வழங்கப்படுவதன் மூலம் கைத்தொழிலாளரையும் நுகர்வோரையும் பாதுகாத்துக்கொள்ளவது இதன் பிரதான நோக்கமாகக் காணப்பட்டது. எவ்வாறெனினும்,

இந் நிதியம் ஆரம்பம் முதல் செயற்பாடற்றுக் காணப்பட்டது. இந் நிதியத்தில் ரூபா 256 மில்லியனான மொத்த சொத்து அளவுகளும் 2011 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிதியம் நிதியம் ஸ்தாபிக்கப்படும் அடிப்படை நோக்கங்களுக்கு முரணாக அந் நிதியம் பயன்படுத்தப்பட்டு 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 11 மில்லியன் பெறுமதியான 2 மோட்டார் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 9,406,117 பெறுமதியான லொறி ஒன்றும் வான் ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக 1999/2000 ஆம் ஆண்டுகளின் போது 15 கப் வண்டிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

அவ்வாறே மீளாய்வாண்டின் பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இந் நிதியம் உபயோகிக்கப்பட்டு ரூபா 145 மில்லியன் தொகையான அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அதன் செயலாற்றல்கள் ஆகக் குறைந்த நிலையில் காணப்பட்டது. நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்ட ரூபா 145 மில்லியனில் ரூபா 110 மில்லியன் தொகை தெங்குக் கைத்தொழில் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குப் புறம்பான செயற்பாடுகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 3.5 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மற்றும் செயற்பாடற்ற சொத்துக்கள்

தும்பு மாதம் தும்புடன் அண்மித்த உற்பத்திகளின் தரங்களை மேம்பாடடையச் செய்வதற்கு அவசியமான ஆராய்ச்சி செயற்பாடுகளைச் செய்யக்கூடிய ரூபா 4.5 மில்லியன் பெறுமதியான ஆராய்ச்சி உபகரணங்கள் காணப்பட்டும் அதற்குப் புறம்பாக தும்பு உற்பத்திசெய்து விற்பனை செய்யும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு செயற்பட்டமையினால் இந்த உபகரணங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 3.6 தரச் சான்றிதழ் விநியோகித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) துண்டுத் தேங்காய்களை ஏற்றுமதி செய்வதற்காக ஏற்றுமதியாளர்களுக்கு தரச் சான்றிதழ் விநியோகிக்கும் போது இலங்கை நியமம் 98:1998 இன் பிரகாரம் உயிர்த்தன்மை பரீட்சிக்கக் கூடிய சூத்திரமான எப்லோடொக்சின் சல்பர் டயொக்சைட் பரிசோதனை செய்யப்படாமல் அது பரீட்சிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் போது 970 தரச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ஆ) துண்டுத் தேங்காய் ஏற்றுமதி செய்வதற்காக ஏற்றுமதியாளர்களுக்கு தரச் சான்றிதழ் விநியோகிக்கும் போது இலங்கை நியமங்கள் 98:1998 இன் பிரகாரம் தேங்காய் தொடர்பாக உயிர்த்தன்மை சூத்திரம் பரீட்சிக்கப்படும் போது செய்ய வேண்டிய முழுமையான கன அளவான பக்ரீரியா, வைரஸ் மற்றும் பங்கஸ் போன்ற பக்ரீரியாக்கள் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை.

துண்டுத் தேங்காய்க்கான நியமம் 98:1998 நியமத்தின் பிரகாரம் முழுமையான கனஅளவு மற்றும் பக்ரீரியா மற்றும் பங்கஸ் கொலிபோம்ஸ் போன்ற அளவைகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் ஏற்றுமதியாளர்களினால் இப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென வேண்டப்படாதிருந்தமையும் துண்டுத் தேங்காய்கள் தொடர்பாக தரக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய இப் பரிசோதனைகள் மாதாந்த திட்டமிடலின் பிரகாரம் சகல துண்டுத் தேங்காய்களையும் உள்ளடங்கக் கூடிய வகையில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையும் அப் பெறுபேற்று அறிக்கை ஆலை உரிமையாளர்களுக்கும் விநியோகிக்கப்படுவதுடன் அப் பெறுபேற்றினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு கூடங்களில் குறைகளை சரிசெய்வதற்கு அவர்களால் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3.7 அதிகாரசபை வளங்கள் வேறு நிறுவகங்களுக்கு வழங்குதலும் பெற்றுக் கொள்ளலும்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் பொது முயற்சிகளின் வளங்கள் பயன்படுத்தப்படலாகாது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ் விதப்புரைகளுக்கு முரணாக 2 வாகனங்கள் அமைச்சின் பயன்பாட்டிற்காக விடுவிக்கப்பட்டிருந்தன.

## 3.8 பதவியணியினர் நிருவாகம்

அதிகார சபையின் 2011 திசெம்பர் 31 அந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் அத் திகதியில் உள்ளவாறான நிலைமைகள் பின்வருமாறு இருந்தது.

| தரம் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பதவி நிலை | 21 | 4 | 17 |
| பதவி நிலையல்லாத | 116 | 72 | 44 |
| கனிஷ்ட | 45 | 38 | 07 |
| | 182 | 114 | 68 |

செயன்முறைச் செயற்பாடுகளுக்கு உரிய 68 பதவிகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பெறவேண்டிய கணக்குகள்

(இ) வாகனப் பயன்பாடு

(ஈ) மனிதவள முகாமைத்துவம்

(உ) செயலாற்றல்

(ஊ) விசேட செயற்திட்டம்

(எ) எண்ணெய் விலையினை நிலைநிறுத்தல் நிதியம்